பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

11 10 2026 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியா - ஆப்பிரிக்கா இடையே பல்வேறு துறைகளில் வலுவான ஒத்துழைப்பு இருப்பதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- மாறிவரும் சூழலுக்கு ஏற்ப இந்தியா - அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தகப் ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் குறிப்பிட்டுள்ளார்.
- வர்த்தக கப்பல் போக்குவரத்து மற்றும் மாலுமிகள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் கவலைக்குரியதாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. சர்பானந்தா சோனாவால் கூறியுள்ளார்.
- குழந்தைகளுக்கான பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றதலைமை நீதிபதி சூரியகாந்த் வலியுறுத்தியுள்ளார்.
- சூடானில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><>

இந்தியா - ஆப்பிரிக்கா இடையே பல்வேறு துறைகளில் வலுவான ஒத்துழைப்பு இருப்பதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர், தெரிவித்துள்ளார்.

அடிஸ் அபாபாவில் உள்ள அத்வா நினைவு அருங்காட்சியகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அவர், வளரும் நாடுகள் சுயசார்பு நிலையை அடைவதற்கான திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஐ நா பாதுகாப்பு சபையில், ஆப்பிரிக்காவிற்கு பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

உலகளவில் வளரும் நாடுகளுடனான ஒற்றுமை, உத்திசார் சுயாட்சி, பன்முனைத்தன்மை மற்றும் பொதுவான வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில், பரஸ்பரம் ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

இதனிடையே, பனாமாவில், நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் குறித்து திரு. எஸ் ஜெய்சங்கர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த இக்கட்டான தருணத்தில், அந்நாட்டு அரசு மற்றும் மக்களுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் விரைவில் மீண்டு வருவதற்கு பிரார்த்தனை செய்வதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<><><><><><><>

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப இந்தியா - அமெரிக்கா இடையேயான இடைக்கால வர்த்தகப் ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இதுதொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர், இறுதி செய்யப்படும் என்று குறிப்பிட்டார்.

அமெரிக்க சந்தையில் இந்திய பொருட்களின் விற்பனையை உறுதி செய்யும் வகையில், பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதக அவர் கூறினார்.

பிரிட்டன், கனடா, இஸ்ரேல், சிலி, வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் யுரேஷியா பொருளாதார யூனியன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

<><><><><><>

வளைகுடா மற்றும் கருங்கடல் பகுதிகளில் வர்த்தக கப்பல் போக்குவரத்து மற்றும் மாலுமிகள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல்கள் கவலைக்குரியதாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. சர்பானந்தா சோனாவால் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்  பனாமா நாட்டுக் கொடியுடன் கச்சா எண்ணெய் ஏற்றிச்சென்ற கப்பல் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கப்பலில் உள்ள 22 இந்திய மாலுமிகள் பாதுகாப்பாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மாலுமிகளின் பாதுகாப்பு குறித்து கப்பல் நிறுவன அதிகாரிகளுடன் தொடர்பில் இருந்து வருவதாகவும், வளைகுடா பகுதிகளில் நிலவிவரும் சூழல் குறித்து உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் திரு. சர்பானந்தா சோனாவல் தெரிவித்துள்ளார்.

<><><><><><>

தில்லியில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து ஐ நா மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ள கருத்துக்கள் அடிப்படை ஆதாரமற்றவை என்று இந்தியா தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் உள்ள ஐ நா-விற்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதித்துவ அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உள்நாட்டு விவகாரங்களில் தேவையின்றி தலையிடுவதை தவிர்க்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடுநிலை மற்றும் பாகுபாடற்ற செயல்பாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப, உலகின் பிற பகுதிகளில் நடைபெறும் பெரிய அளவிலான போராட்டங்கள் மீதும் அந்த ஆணையம் கவனம் செலுத்த வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்பதையும், அங்கு அமைதியான முறையில் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான உரிமை அரசியலமைப்புச் சட்டத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்டு, வலுவான அமைப்புகள், நீதித்துறை மற்றும் பத்திரிக்கை சுதந்திரம் போன்றவற்றால் பாதுகாக்கப்படுகிறது என்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஒவ்வொரு ஜனநாயக நாட்டையும் போலவே, இந்தியாவிலும் பொது ஒழுங்கைப் பராமரிப்பதறகான நியாயமான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, மக்கள் அதற்கான உரிமையைப் பயன்படுத்துகின்றனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><><><>

தமிழகத்தில் 13 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திரமோடி, சென்னையில் இன்று தொடங்கி வைக்கிறார்.

போரூர் - பூந்தமல்லி இடையேயான மெட்ரோ ரயில் சேவையை தொடங்கிவைத்து அதில் பயணம் மேற்கொள்கிறார்.

இரண்டாவது கட்டமாக சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின்கீழ் 4 ஆயிரத்து 900 கோடி ரூபாய் மதிப்பில், 3 புள்ளி 7 கிலோமீட்டர் தொலைவிற்கு இரண்டு அடுக்கு வழித்தடமாக அமைக்கப்பட்டுள்ளது.

750 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பல்வேறு ரயில் உள்கட்டமைப்பு திட்டங்களையும் அவர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

சென்னை பெட்ரோலியம் நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் திறனை மேம்படுத்தும் வகையில் ஆயிரத்து 620 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

மேலும் 3 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டி வைப்பதுடன், முடிவடைந்த திட்டங்களை தொடங்கியும் வைக்கிறார்.

நாகை - தஞ்சாவூர் சாலையில் திருவாரூர் புறவழிச்சாலைக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

சென்னை ஐ.ஐ.டியில் உள்ள சுதா கோபாலகிருஷ்ணன், மூலை ஆராய்ச்சி மையத்தையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ், மேம்படுத்தப்பட்ட பழநி, வேலூர் கண்டோன்மென்ட், அம்பாசமுத்திரம், பரமக்குடி மற்றும் நாமக்கல் ரயில் நிலையங்களையும் பிரதமர் திறந்து வைக்கிறார்.

தமிழகத்தில் கடல்சார் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதற்கும், துறைமுகத்தின் சரக்கு கையாளும் திறனை அதிகரிக்கும் வகையில், பல்வேறு திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

பிரதமரின் வருகையையொட்டி சென்னையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<><><><><><><>

குழந்தைகளுக்கான பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூரியகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

சிறார் நீதிச் சட்டம் அமலுக்கு வந்து 10 ஆணடுகள் நிறைவடைந்ததை குறிக்கும் வகையில் புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

சட்டங்கள், சீர்த்திருத்தம், மறுவாழ்வை அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும் என்று திரு. சூரியகாந்த் கேட்டுக் கொண்டார்.

<><><><><><><>

ஜம்மு-காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள எல்லைப் பகுதியில், ஐந்து கண்ணிவெடிகள் கண்டறியப்பட்டு, பாதுகாப்பான முறையில் அகற்றப்பட்டுள்ளதாக இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது.

தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்கும் வகையில், பாதுகாப்பு அமைப்பின் ஒரு பகுதியாக, எல்லையையொட்டியப் பகுதிகளில் கண்ணிவெடிகள் பதிக்கப்பட்டுள்ளன.

எனினும், பலத்த மழை காரணமாக, சில சமயங்களில் இந்தக் கண்ணிவெடிகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், அவற்றை கண்டறிந்து அகற்றப்பட்டு வருவதாக ராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

<><><><><><><>

சூடானில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

எத்தியோப்பியா எல்லையையொட்டிய பகுதிகளில் அந்நாட்டு துணை ராணுவத்தினர் இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சூடான் ராணுவத்திற்கும், துணை ராணுவத்தினருக்கும் இடையே கடந்த 3 ஆண்டுகளாக மோதல் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

<><><><><><><>

சவுதி அரேபியா தலைநகர் ரியாத்தில் உள்ள விமான நிலையத்தின் மீதான தாக்குதலில், விமானி ஒருவர் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

கிங் காலித் சர்வதேச விமான நிலையம், பிற சவுதி விமான நிலையங்கள், ராணுவ தளங்கள், எண்ணெய் உள்கட்டமைப்பு வசதிகள் மீதான தாக்குதல்களுக்கு ஏமனில் இருந்து செயல்படும் ஹவுத்தி அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

இதனிடையே, ஹவுதிகளுக்கு எதிராக ராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து அமெரிக்கா பரிசீலித்து வருவதாக அந்நாட்டு அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

<><><><><><><>

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் இடையேயான மூன்றாவது டுவென்ட்டி - டுவென்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இந்தூரில் இப்போட்டி இரவு ஏழு மணிக்குத் தொடங்குகிறது.

<><><><><><><>

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் Bendigo சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் Ansh Negi, தைவானின் Liao Jhuo su-வை இன்று எதிர்கொள்கிறார்.

<><><><><><><>

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், சென்னை - கோவா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிந்தது.

Margoa-ல் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

இன்று நடைபெறும் ஆட்டங்களில், கேரளா - இன்டெர் காசி அணியையும், சர்ச்சில் பிரதர்ஸ் அணி - மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

<><><><><><><><>

தென்னிந்திய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி, நாமக்கல்லை அடுத்த கீரம்பூரில் நேற்று தொடங்கியது.

இரண்டு நாள் நடைபெறும் இப்போட்டியில், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 160 வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

<><><><><><><><>